# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மறு ஆய்வு மனு எண் 2 / 2015**

திரு. அர. ஏழுமலை,
த/பெ அ. ரங்கசாமி,
கன்னியம்மன் கோயில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம். ........மேல் முறையீட்டாளர்
(திரு. அர. ஏழுமலை)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு,
செங்கல்பட்டு – 603 001 ......... எதிர்மனுதாரர்
(திரு. S. மனோகரன், உதவி செயற்பொறியாளர்/
திருப்போரூர்)

**கேட்புரை நாள்: 20–11–2015**

**ஆணை நாள் : 9–12–2015**

திரு. அர. ஏழுமலை, மேட்டுக்காடு, சட்டமங்கலம் கிராமம் அவர்களின் மேல்முறையீட்டு மனு எண்.31/2015ற்கான மின்குறைதீர்ப்பாளரின் 29.7.2015 நாளிட்ட ஆணையை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சமர்ப்பித்துள்ள 24.8.2015 நாளிட்ட மனு, மறு ஆய்வு மனு எண்.2/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது 20–11–2015 அன்று மின் குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது. மேல் முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், கேட்புரையின் பொழுது இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின் குறைதீர்ப்பாளரால் கீழ் கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மனுதாரரின் கோரிக்கை :**

திரு. அர. எழுமலை அவர்கள் மின்குறைதீர்ப்பாளர் தன்னுடைய தீர்வினை மீண்டும் பரிசீலனை செய்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குரிய தீர்வு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**2. மனுதாரரின் மறு ஆய்வு மனுவிலுள்ள வாதங்கள்**

2.1 தங்களின் ஆணை மின்இணைப்பு எண்.572/008/929ற்கு வழங்கிய தீர்வானது மின்இணைப்பு வழங்கிய பொறியாளர்கள் தவறு செய்யவில்லை என குறிப்பிடும் அளவில் தங்களின் தீர்வை மறுபடியும் விசாரணை செய்ய பத்திர பதிவு ஆவணமும் தனிநபர் ஒருவர் விற்பனை செய்திட்டதை தான் குறிக்கின்றது சொத்து விவகாரத்தில் குறிப்பிட்டுள்ளபடி மின்இணைப்பு வழங்கிட உரிய ஆவணமாக உள்ளது சர்வே எண். 258/12 தான் குறிப்பிட்டுள்ளது. ஊராட்சி நிருவாகம் அளித்திட்ட வரிரசீதில் சர்வே எண்.258/12 தான் குறிப்பிட்டுள்ளது. இரண்டிலும்தவறாக குறிப்பிடப்படவில்லை என தங்களின் தீர்வில் குறிப்பிடவில்லை.

2.2 சர்வே எண்.258/12 என பத்திர ஆவணம் மற்றும் வரி ரசீதில் உள்ள சர்வே எண் குறிப்பிடாமல் 258/12–பி என விண்ணப்பத்தில் மாற்றி குறித்திட்டதும் தவறில்லை. இதுபோன்று விண்ணப்பங்கள் பெற்று மின்இணைப்பு அளித்திட்டதும் தவறில்லை. மின்இணைப்பு அளித்திடலாம் பின்னர் ஏதேனும் பிரச்சனை எழும் காலத்தில் பொறியாளர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி கிராம நிருவாக அலுவலர் சான்று தேவையில்லை என்று குறித்து கடிதம் அளித்திட்ட பின்னரும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி அளித்திடாத மற்றும் மின் நுகர்வோர் மன்ற தலைவர் அவர்களின் விசாரணையின் போது முன்னிருத்தாத ஒப்புதல் கடிதமும், கிராம நிருவாக அலுவலர் சான்றும் மின்குறைதீர்ப்பாளர் விசாரணையின்போது அளித்திட்டால் ஏற்றுக்கொண்டபடி தங்களின் விசாரணையில் முன்னிருத்தியதற்கான

கேள்வியினை பொறியாளர்களிடம் எழுப்பியதற்கான எவ்வித குறிப்பும் இல்லாத நிலையில் தங்களின் தீர்வு அமைந்துள்ளது.

2.3 தாங்கள் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு மின்சார விதிமுறையில் 27/3ல் குறிப்பிட்டுள்ளபடி ஆவணம் அல்லது வரிரசீது இவை இரண்டில் ஒரே மாதிரியான சர்வே எண்கள் உள்ளபோது விண்ணப்பத்தில் மாற்றி குறிப்பிடுவதற்கான கேள்வியும் எழுப்பியதற்காக தாங்கள் அளித்திட்ட தீர்வில் காணப்படவில்லை.

2.4 இதுபோன்று சர்வே எண்கள் மாற்றி குறிப்பிட்டு அளித்திடும் மின் இணைப்பு பற்றியும் பத்திர ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லைக்குள்ள மின்இணைப்பு அளித்திடாமல் மின்இணைப்பு இடம்மாற்றி தனி பத்திரபதிவு செய்யப்பட்ட நான்கு புற எல்லைகள் கொண்ட இடத்தில் மாற்றி கொடுத்திடலாம். மின் இணைப்பு கொடுக்கப்பட்டதில் தவறில்லை மற்றும் ஆணைய விதிமுறையில் குறிப்பிட்டுள்ளது என அவ்விதியின் தொகுப்பிற்கான எண் பற்றியும் குறிப்பும் காணப்படவில்லை, மின்இணைப்பு கொடுக்கப்பட்ட இடம் பற்றியும் இடம் பற்றி நேரடி களஆய்வு செய்ய கோரி இருந்தும் கள ஆய்வு செய்யாமல் தீர்வு வழங்கிடுவதற்கு ஆணையம் தங்களுக்கு அதிகாரம் வழங்கியுள்ளதா என அறியமுடியவில்லை.

2.5 மேற்குறிப்பிட்டுள்ள ஆவணம் மற்றும் சான்றுகள் பற்றி பிரச்சனை எழும்காலத்தில் நிவர்த்தி செய்ய எங்கும் சமர்ப்பித்திடாத தங்களிடம் மட்டும் சமர்ப்பித்திட்ட கிராம நிருவாக அலுவலர் சான்று பற்றி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் எந்த விதிதொகுப்பில் எந்த வரிசை எண்ணில் குறிப்பிட்டுள்ளது பற்றிய எவ்வித குறிப்பும் தங்கள் அளித்திட்ட தீர்வில் குறிப்பிடாமல் எதற்காக கள ஆய்வு செய்யாமல் தவிர்க்கப்பட்டதும் பற்றி குறிப்பிடாமல் தீர்வு காணப்படுகிறது.

2.6 மீண்டும் அனைத்து கடித நகல்களை பொறியாளர் கடிதத்தில் குறித்துள்ளபடி ஆய்வு செய்வதற்கு உரிய அலுவலகங்களுக்கு அனுப்பி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.258/12 பிளவுப்பட்டபிறகு பதிவுசெய்யப்பட்ட ஆவணமா அல்லது பதிவிற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட ஆவணமா அதில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் விற்பனை செய்யப்பட்டவர்க்கு

பாகம் பிரித்து கிடைக்கபெற்றதில் முழு சொத்தினை விற்பனை செய்கின்றாரா அல்லது பாகம் பிரிக்கப்படாமல் தன்பாகநிலத்தினை விற்பனை செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டதா அல்லது சொத்து விவரத்தில் கூட்டு உரிமைதாரர்களை சுட்டி காண்பிக்கின்றதா மற்றும் ஊராட்சி அலுவலகத்தில் வழங்கப்பட்ட வரிரசீது எந்த ஆவணத்தின் அடிப்படையில் வழங்கியுள்ளார்கள் அவர்கள் குறிப்பிட்டுள்ள சர்வே எண் பிழையானதா என தாங்கள் அறிந்திடுவதற்கும் சம்பந்தப்பட்ட அலுவலகத்தின் அலுவலர்/அதிகாரிகளின் பார்வைக்கு அனுப்பி ஆய்வுக்கு உட்படுத்தி அவர்கள் அளித்திடும் தகவல் தாங்கள் அறிந்திட்ட பின்னர் பொறியாளர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி கிராம நிருவாக அலுவலர்கள் சான்று தேவைப்படாதபோது தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி அளித்திடாத மற்றும் மின்நுகர்வோர் மன்ற தலைவர் அவர்களின் விசாரணையின் போது முன்னிருத்தாத ஒப்புதல் கடிதமும் கிராம நிருவாக அலுவலர் வழங்கிய சான்று முன்னிலைப்படுத்தியதால் வட்டாட்சியர் அவர்கள் அளிக்கவேண்டிய சான்றுக்கு ஆய்வு செய்து பரிந்துரை வழங்கிடவேண்டிய கிராம நிருவாக அலுவலர் சான்று ஏற்றுக்கொள்ளலாம் என்றும், பத்திரபதிவு மற்றும் வரிரசீதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் ஒரே எண்ணாக பதிவாகியுள்ளபோது விண்ணப்பத்தில் சர்வே எண் மாற்றி குறித்து கொடுத்திடும் பட்சத்தில் மின் இணைப்பினை இடம் மாற்றி கொடுத்திடலாம் என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் விதிமுறையின் விதித்தொகுப்பில் எந்த வரிசை எண்ணில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை குறித்திடாமல் தாங்கள் வழங்கிய தீர்வானது ஒருதலைபட்சமாக பொறியாளர்களை காப்பாற்றும் விதத்தில் அமைந்துள்ளது.

## 3. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

3.1 மறு ஆய்வு மனு செய்துள்ள மேல்முறையீட்டாளரும் மற்றும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20–11–2015 அன்று மின்குறை தீர்ப்பாளரால் கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மறு ஆய்வு மனு செய்துள்ள திரு. அர. ஏழுமலை அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

3.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. மனோகரன், உதவி செயற்பொறியாளர்/திருப்போரூர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

4. <u>மனுதாரர் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

4.1 மேல்முறையீட்டாளர் திரு. அர. ஏழுமலை அவர்கள் தன்னுடைய மறு ஆய்வு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

4.2 மின்சார இணைப்பு கோரும் விண்ணப்பத்திலுள்ள சர்வே எண்.258/2–பி ஆனால், உரிமை சான்றிதழ் என்று ஊராட்சி நிறுவனம் கொடுத்துள்ள வரிரசீதில் தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்.258/12. மேலும், நிலத்தை வாங்கியமைக்கான பத்திரத்(sale deed)திலும் உள்ள சர்வே எண்.258/12தான். எனவே, சர்வே எண் வித்தியாசம் உள்ளது என்று தெரிவித்து கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழின்படி மின்இணைப்பு கொடுத்தது வெளிப்படையாக தெரியும் பிழை என்பதால் மின்குறைதீர்ப்பாளரின் தீர்வை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரினார்.

4.3 கிராம நிர்வாக அலுவலரின் சான்றை ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒழுங்குமுறை ஆணையத்தின் எந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் தீர்வில் தெரிவிக்கப்படவில்லை என்பதும் தவறு என்று வாதாடினார்.

4.4 அவர் கேட்டுக் கொண்டது போல் மின் குறைதீர்ப்பாளர் நேரடி கள ஆய்வு செய்யாமல் தீர்வு வழங்குவதற்கு ஆணையம் அதிகாரம் வழங்கியுள்ளதா என்றும் வாதாடினார்.

4.5 உரிமம்தாரரின் செயற்பொறியாளர் வருவாய் ஆவணங்கள், சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெறவேண்டும் என்றும் தெரிவித்துள்ள போது ஒரு சர்வே எண் பற்றிய சந்தேகத்திற்கு விளக்கம் வட்டாட்சியரிடம் பெறாமல் கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்வது தவறு என்று வாதாடினார்.

4.6 கிராம நிர்வாக அலுவலரின் சான்று மின்குறைதீர்ப்பாளரின் விசாரணையின்பொழுது தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் விவாதிக்கும் பொழுது சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

4.7 கிராம நிர்வாகஅலுவலருக்கு இருப்பிட சான்று அளிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் அவ்வாறு சான்று வழங்குவது குறித்து அறிக்கைதான் அனுப்பமுடியும் என்றும் வாதுரை புரிந்தார்.

5. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்:</u>

5.1 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. மனோகரன், உதவி செயற் பொறியாளர் / திருப்போரூர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.2 மின்இணைப்பு வழங்கும் பொழுது கிராம நிர்வாக அலுவலரின் சான்று உரிமை சான்று என்ற வகையில் வாங்கப்படவில்லை. சர்வே எண் விண்ணப்ப படிவத்தில் 258/12–பி என்றும் உரிமை சான்றிதழின் வரி ரசீது மற்றும் விற்பனை பத்திரங்களில் 258/12 என்றும் வேறு பட்டுள்ளதால்தான், கிராம நிர்வாக அலுவலர் என்பவர் வருவாய்த்துறை அலுவலர் என்பதாலும் சர்வே எண்கள் பற்றிய ஆவணங்களை வைத்திருப்பவர் என்பதாலும் அவரிடம் விளக்கம் (clarification) பெறப்பட்டது என்றும், விவசாய விண்ணப்பங்களில் கிராம நிர்வாக அதிகாரியின் சொத்து உரிமை சான்றிதழ் பெறும் வழக்கம் உள்ளது என்பதையும் தெரிவித்து எனவே, விளக்கம் கிராம நிர்வாக அதிகாரியிடம் பெறுவது தவறு இல்லை என்று வாதாடினார்.

5.3 மின்இணைப்பு வழங்கப்பட்ட இடத்தில் கள ஆய்வு வாரிய அதிகாரிகளால் செய்யப்பட்டு தான் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதுரை புரிந்தார்.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

6.1 இந்த மனுதாரர் மின்இணைப்பு எண்.572–008–929ற்கான மின்இணைப்பை வழங்குவதற்காக பெறப்பட்ட விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள உரிமை சான்றுகள் இரண்டிலும் தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்.258/12. ஆனால், விண்ணப்பத்திலுள்ள வீடு

இருக்கும் இடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்.258/12பி என்று வேறுபட்டுள்ளது என்றும் அந்த வேறுபாடு இருந்தும் கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெற்று மின்இணைப்பு வழங்கியது தவறு. அது வெளிப்படையாக உள்ள தவறு. எனவே, ஆணையில் மறு பரிசீலனை வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

6.2 மேற்கண்ட மின் இணைப்பு வழங்குவதற்கு கிராம நிர்வாக அலுவலரின் சான்று உரிமை என்ற வகையில் வாங்கப்படவில்லை. சர்வே எண் விண்ணப்ப படிவத்தில் 258/12–பி என்றும் பஞ்சாயத்து வரி ரசீது மற்றும் விற்பனை பத்திரங்களில் சர்வே எண். 258/12 என்று வேறுபட்டுள்ளதால்தான் கிராம நிர்வாக அலுவலர் என்பவர் வருவாய்த்துறை அலுவலர் என்பதாலும், சர்வே எண்கள் பற்றிய ஆவணங்களை வைத்திருப்பவர் என்பதாலும்தான் அவரின் விளக்கம் (clarification) பெறப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் கேட்புரையின்பொழுது வாதிட்டுள்ளார். மேலும், விவசாய விண்ணப்பங்களில் கிராம நிர்வாக அலுவலரின் சான்றிதழ் பெறும் வழக்கம் வாரியத்தில் உள்ளது என்பதையும் சுட்டிகாட்டி விளக்கம் கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்டது தவறு இல்லை என்று வாதாடியுள்ளார்.

6.3 இது சம்பந்தமாக நான், மேல்முறையீட்டு மனு எண்.31/2015இன் 29.7.2015 நாளிட்ட ஆணையின் பத்தி எண்.10.10,10.11 மற்றும் 10.12 ஆகியவற்றை ஆராய விரும்புகிறேன். அந்த பத்திகள் ஆணையிலுள்ளவாறு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

> *“10.10 இந்த வழக்கில் வெண்பேடு ஊராட்சி வழங்கிய சொத்து வரி ரசீது மற்றும் விற்பனை பத்திர நகல் ஆகிய இரண்டு ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆனால், விண்ணப்பத்தில் வீட்டின் சர்வே எண்.258/12பி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட ஆவணங்களில் சர்வே எண்.258/12 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வே எண். வித்தியாசம் இருந்ததால் கிராம நிர்வாக அலுவலரின் சான்றும் பெறப்பட்டுள்ளது. அந்த சான்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*
>
> *“சான்று*
>
> *காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் வட்டம், நெ.101, வெண்பேடு கிராமத்தில் கிராம நத்தம் புல எண்.258/12Bல் திரு. சீதாராமன் த/பெ வைரவன் என்பவர் தளம் வீடு சுமார் 0.03 செண்ட் இடத்தில் அமைத்துள்ளார் என சான்று வழங்கப்படுகிறது. மேற்கண்ட வீட்டிற்கான ஊராட்சி வரி இரசீது எண்.52419/19.6.2013 ன்படி வரி செலுத்தி இரசீது இணைத்துள்ளார். சான்று மேற்கண்ட வீட்டிற்கு மின் இணைப்பு பெற வழங்கப்படுகிறது.*

*மேற்கண்ட மனைக்கு நான்கெல்லைகள் விபரம்*
*மேற்கில் – சீதாராமன் மனைவி ஷகீலா நிலம்*
*கிழக்கில் – மோகன் நிலம்*
*வடக்கில் – ஏா பெருங்கால்வாய்*
*தெற்கில் – ஆனந்த நாயக்கர் நிலம்*

*ஒப்பம் /கிராம நிர்வாக அலுவலர்*
*101 வெண்பேடு, 117, காட்டூர்*
*திருப்போரூர் தாலுகா"*

*10.11 மேற்கண்ட சான்றின்படி வெண்பேடு கிராமத்தின் ஊராட்சி வரி ரசீது எண்52419/19.6.2013ன்படி வரி விதிக்கப்பட்டுள்ள வீடு இருக்கும்இடம், சர்வே எண். 258/12பி என்பதும், அது திரு. சீதாராமன் த/பெ வைரவன் அவர்களால் அமைக்கப்பட்டது என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும், விற்பனை பத்திரத்திலுள்ள நான்கு மாலும், கிராம நிர்வாக அலுவலரின் சான்றிலுள்ள நான்கு மாலும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளன. எனவே, உரிய ஆவணங்கள் பெற்றுதான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தீர்வு செய்கிறேன்.*

*10.12 ஒரு நிலம், பிளவுபட்டு விற்பனை செய்யும்பொழுது சர்வே எண் மாறுவது இயற்கை என்பதும் சர்வே எண். வருவாய் துறையினரால் தான் சரியாக அடையளம்காட்ட முடியும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. மேலும், விதிகளில் எந்த ஆவணங்கள் பெறப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு கொடுக்கப்படும் ஆவணங்களில் ஏதேனும் விளக்கம் (clarification) தேவைப்படும்பொழுது உரிமம்தாரர் தகுதி வாய்ந்த சம்பந்தப்பட்ட அரசு அலுவலகத்தின் விளக்கத்தை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை என்றும் நான் கருதுகிறேன். எனவே, சர்வே எண்ணில் மாற்றம் உள்ள பொழுது உரிய வருவாய்த் துறை அலுவலரிடம் விளக்கம்பெற்று பின்பு இணைப்பு வழங்கியுள்ளதால் அதை தவறு என்று கருதமுடியாது. மேலும், எதிர்மனுதாரர் மின் இணைப்பு கோரிய திரு. சீத்தாராமனிடம் பிற்காலத்தில் ஆட்சேபனை எதுவும் பெறப்பட்டால் மின் இணைப்பை துண்டிக்க சம்மதிக்கிறேன் என்ற ஒப்புதல் கடிதத்தையும் பெற்றுள்ளதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."*

6.4 மேற்கண்ட பத்திகளில் உள்ள விவரங்களை ஆய்வு செய்யும்பொழுது நாம் அறிவது, மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண்ணிற்கும் உரிமை சான்றிதழ்களான பஞ்சாயத்து வரி ரசீதிலுள்ள சர்வே எண் மற்றும் சொத்து விற்பனை பத்திரத்திலுள்ள சர்வே எண் ஆகியவற்றிற்கும் உள்ள வித்தியாசம் மின்குறைதீர்ப்பாளரால் தீர ஆய்வு செய்யப்பட்டுதான் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. எனவே, சர்வே எண்ணில் உள்ள

வித்தியாசம் கிராம நிர்வாக அலுவலரின் சான்றின்படி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது வெளிப்படையான தவறு என்ற மனுதாரரின் வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**6.5** மேலும், விண்ணப்பதாரர் சமர்ப்பித்துள்ள உரிமைச்சான்றில் உள்ள சர்வே எண்ணிற்கும், விண்ணபத்திலுள்ள சர்வே எண்ணிற்கும் வித்தியாசம் வரும்பொழுது கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெறுவதற்கு ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள விதிமுறைகளின் விதி சுட்டிக்காட்டப்படவில்லை என்று வாதித்து அதுவும் தவறு என்று வாதிட்டுள்ளார்.

**6.6** சொத்து உரிமைக்காக, விண்ணப்பதாரர் வீட்டுவரி ரசீது மற்றும் விற்பனை பத்திர நகல் இரண்டு ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார். மின்சார பகிர்மான விதிகளின்படி வீட்டுவரி ரசீது அல்லது விற்பனை பத்திர நகல் ஏதேனும் ஒன்று மட்டும் சமர்ப்பித்தால் போதும் ஆனால், வீட்டுவரி ரசீதில் தெருப்பெயர் சரியாக உள்ளது ஆனால், நிலத்தின் சர்வே எண்.258/12 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். 258/12–பி என்பது 258/12 ன் உட்பிரிவு என்பதால் சம்பந்தப்பட்ட கிராமத்தின் கிராம நிர்வாக அதிகாரியிடம் பெறப்பட்ட வீட்டுவரி ரசீது உள்ள வீடு இருக்கும் இடம் 258/12–பி தான் என்று தெரிவிக்கும் சான்றிதழ் உரிமம்தாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மின்சார பகிர்மான விதித்தொகுப்பில் அவ்வாறு சர்வே எண் வேறுபாடு வரும்போது யாரிடம் விளக்கம் பெறவேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை. அவ்வாறு தெரிவிக்கப்படாத நிலையில் அது வருவாய் பிரிவு சம்பந்தப்பட்ட விளக்கம் என்பதால் வருவாய்ப் பிரிவு அலுவலரான சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்டுள்ளது என்பதாலும், எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளது போல் விவசாய மின்இணைப்புகள் வழங்குவதற்கு கிராம நிர்வாக அலுவலரின் உரிமை சான்று ஏற்றுக் கொள்ளப்படும் வழக்கம் உள்ளது என்பதாலும் எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. மேலும், கிராம நிர்வாக அலுவலரின் சான்று சொத்துரிமைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதிலுள்ள

சர்வே எண் வேறுபாட்டிற்கான விளக்கத்திற்காகத்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

6.7 எனவே, மின்பகிர்மான விதித்தொகுப்பில் சர்வே எண். பிளவு படுவதால் ஏற்படும் வித்தியாசத்திற்கான விளக்கத்தை எந்த அலுவலரிடம் பெறப்படவேண்டும் என்று தெரிவிக்காத நிலையில் உரிமம்தாரர் வருவாய்ப் பிரிவு அலுவலரான சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் விளக்கம் பெற்றது தவறு என்ற வாதம் ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

6.8 மேலும், மின்குறைதீர்மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத கிராம நிர்வாக அலுவலரின் சான்று மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற வாதமும் வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கீழ்கண்ட தகவல்கள் சரிபார்க்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| மின்சார இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு நாள் | – | 16.9.2013 |
| வீட்டுவரி ரசீது எண்.52419ன் நாள் | – | 19.6.2013 |
| கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெறப்பட்ட நாள் | – | 24.6.2013 |
| மின்இணைப்பு வழங்கப்பட்ட நாள் | – | 19.9.2013 |

6.9 மேற்கண்ட தகவல்களின்படி மின்இணைப்பு விண்ணப்பம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பே அதாவது வீட்டுவரி ரசீது பெறப்பட்டு சுமார் 5 நாட்களில் கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெறப்பட்டுள்ளது. மேலும், மின்இணைப்பு வழங்குவதற்கு மூன்றுமாத காலத்திற்கு முன்பே கிராம நிர்வாக அலுவலரின் சான்று பெறப்பட்டுள்ளதால் இணைப்பை வழங்குவதற்கு முன்பே பெறப்பட்ட சான்று என்று தெரிகிறது. எனவே, அந்த சான்றை மின்குறைதீர்ப்பாளர் எடுத்துக் கொண்டதில் தவறு ஏதும் இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

6.10 இந்த மனுதாரர் மின்இணைப்பு வழங்கப்பட்ட இடத்தில் வீடு இல்லை என்று தெரிவிக்கவில்லை. அது திரு.சீத்தாராமனுக்கு சொந்தமில்லை என்றும் வாதிடவில்லை. சர்வே எண் மாற்றம் உள்ளது என்பதைத்தான் சுட்டிக்காட்டி மின்குறைதீர்ப்பாளரின் கள ஆய்வு கோரியுள்ளார். ஒரு சர்வே எண் பற்றிய சரியான விளக்கம் வருவாய்த்துறை

அதிகாரிகளால்தான் சரியாக வழங்கமுடியும் என்பதாலும் அந்த விளக்கம் கிராம நிர்வாக அதிகாரியிடம் பெறப்பட்டுள்ளதாலும் கள ஆய்வு தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

6.11 மின்குறைதீர்ப்பாளரின் ஆணையை மறு ஆய்வு கோரும் மனுக்கள் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளாருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 22(6)ன்படி இருக்க வேண்டும் . அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*" மின் குறைதீர்ப்பாளர் தானே முற்பட்டோ அல்லது சம்பந்தப்பட்ட நபர்கள் அல்லது தரப்பினர்களின் விண்ணப்பத்தின் பேரிலோ, முடிவு, பணிப்புரை அல்லது ஆணை எதுவும் செய்யப்படுகிற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் அத்தகைய முடிவு, பணிப்புரை அல்லது ஆணை ஆகியவை பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றி அறியாமை, அல்லது வெளிப்படையாய் தெரியும் பிழைகள் காரணமாய் நிகழ்ந்தது என்ற காரணத்திற்காக அத்தகைய முடிவு, பணிப்புரை அல்லது ஆணையை மறு ஆய்வு செய்யலாம்.*

*(அ) மறு ஆய்விற்கான விண்ணப்பத்தில் மனுதாரரின் பெயர், முகவரி மின்குறைதீர்ப்பாளரின் ஆணை எண்ணும் தேதியும் மற்றும் எந்த அடிப்படையில் மறு ஆய்வு கோரப்படுகிறது அதாவது– பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றிய அறியாமை, வெளிப்படையாய் தெரியும் பிழைகள் காரணமாய் நிகழ்ந்தது என்பதை குறிப்பிட வேண்டும்."*

6.12 இந்த மனுதாரர் எடுத்துரைத்த வாதங்கள் அனைத்தும் ஒரு தீர்வை மறு பரிசீலனை செய்ய வேண்டிய காரணங்கள் என்று மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 22(6)–ல் தெரிவித்துள்ள பொருண்மை பற்றிய தவறு, அடிப்படை உண்மை பற்றிய அறியாமை மற்றும் வெளிப்படையாக தெரியும் பிழைகள் என்ற காரணங்களாக இல்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.31/2015 தீர்வில் மறு ஆய்வு எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 7. <u>முடிவுரை</u>

7.1 மனுதாரரின் மறு ஆய்வு கோரும் மனு எண்.2/2015 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 22(6)–ல்

கூறப்பட்டுள்ள காரணங்களாக இல்லை என்பதால் மேற்கண்ட மறு ஆய்வு கோரும் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

11.2 மேற்கண்ட முடிவுடன் மறு ஆய்வு மனு எண்.2/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>**பெறுநர் :**</u>

திரு. அர. ஏழுமலை,
த/பெ அ. ரங்கசாமி,
கன்னியம்மன் கோயில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு,(புதிய பேரூந்து நிலையம் அருகில்)
செங்கல்பட்டு – 603 001

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130, ஜி.எஸ்.டி ரோடு,(புதிய பேரூந்து நிலையம் அருகில்)
செங்கல்பட்டு – 603 001

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **<u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.